கூட்ட எண் 11 நகராட்சி அலுவலகம்,
2019 - 2020 -ம் ஆண்டு ஆரணி,
நாள் 28.02.2020

2020-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28.02.2020-ந்தேதி வெள்ளிக் கிழமை மாலை 4.00 மணியளவில் ஆரணி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

பொருள்கள்

1. இந்நகராட்சி ஆணையர் அவர்களின் பிப்ரவரி 2020 ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

2. இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் பிப்ரவரி 2020 ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

3. இந்நகராட்சி சொந்தமான BOV வாகனங்களில் உள்ள 30 பேட்டரிகள் புதியதாக வாங்க இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிலிருந்து பொறியியல் பிரிவுக்கு குறிப்பு வழங்கப்பட்டதின் பேரில் 30 பேட்டரிகள் புதியதாக வாங்க தனியார் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.மேற்படி விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய SHREE BHAIRAVA GREEN LINES,31C SEEVERAM, 1 street, Perungudi, Ch-96 என்கிற நிறுவனத்தினை அங்கீகரித்து 30 பேட்டரிகள் சப்ளை செய்ய தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
அலுவக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.

4 ஆரணி நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2019 - 2020ம் ஆண்டிற்கான பின்வரும் பணி மேற்கொள்ள 16.03.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | ஒப்பந்ததாரர் விவரம் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| 1 | ஆரணி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு பேவர் பிளாக் அமைத்தல் பணி | 6.60 | S.உஷாராணி<br>E.இளங்கோவன் | 0.06% குறைவு<br>0.50%. அதிகம் |

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர்க்கு பணிஆணை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.
(கோப்பு எண் 3332/இ1/2020)

5. ஆரணி நகராட்சியில் வார்டு எண் 13-ல் சபாஷ்கான் தெரு மையத்தில் பழைய கிணறு மேல் சிமெண்ட் பலகை போடப்பட்டு இருகிறது.தெருவில் வாகனங்கள் சென்று வரும்போது சிமெண்ட் பலகை உடைப்பு ஏற்பட்டு அதிலிருந்து கம்பிகள் வெளியே வருகிறது.இதனால் அவ்வழியாக செல்லும் பொதுமக்களுக்கு அடிப்படும் நிலையில் இருப்பதால் இந்த கிணற்றிக்கு புதியதாக இரும்பு கம்பியால் சிமெண்ட் பலகை பொருத்தி தரவும், பள்ளமான பகுதியில் கிராவல் நிரப்பி தர ஆகும் தோராயமாக மதிப்பீடு ரூ.30000.00-ஐ வருவாய் நிதியில் இருந்து செலவு செய்யவும் நகர மன்ற பொருளுக்கும் அனுமதிக்கும்.
அலுவலக குறிப்பு :- 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 2. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

.

6. ஆரணி நகராட்சியில் உள்ள ஜெயலட்சுமி நகரில் கால்வாய் அடைப்பு ஏற்பட்டு பொதுமக்களுக்கு இடையுறாக உள்ளதை JCB இயந்திரம் கொண்டு அகற்றிய ஸ்ரீஜானகி எர்த் முவர்ஸ் நிறுவனத்திற்கு 34 மணி நேரம் வேலை செய்ததற்கு ரூ.28900/- செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கும்.
அலுவலக குறிப்பு :- 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 2. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் : 1867 / 2019 / எச்1)

7.ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட புதுகாமூர் ரோட்டில் அமைந்துள்ள முட்புதர்களை JCB இயந்திரம் கொண்டு அகற்றியதற்கு ஸ்ரீஜானகி எர்த் முவர்ஸ் நிறுவனத்திற்கு 33 மணி நேரம் JCB இயக்கியதற்கு 1 மணி நேரத்திற்கு ரூ.850/- வீதம் ரூ.28050/- செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கும்.
அலுவலக குறிப்பு :- 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.2. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.(கோப்பு எண் : 1867 / 2019 / எச்1)

8. வாணியம்பாடி நகராட்சி ஆணையாளர் (பொ) அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு வேலூர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்தில் காணொளி காட்சி அமைக்கவும் கூட்ட அரங்கு கூட்டமைப்பு அமைக்கவும் மற்றும் மின்சார கட்டமைப்பு ஆகியவற்றை அமைக்க மதிப்பீடு தொகை ரூ.46,50,000/- இதில் ஒவ்வொரு நகராட்சிக்கும் பகிர்ந்தளிக்கும் பங்குத்தொகையாக முதல்நிலை நகராட்சியான ஆரணி நகராட்சிக்கு 5% தொகையை ரூ. 2,32,500/ ஐ வாணியம்பாடி நகராட்சிக்கு வரைவோலையாக செலுத்த மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (ந.க.எண்.123/பி2/2020).

9. ஆரணி நகராட்சிக்கு சொந்தமான கடைகள் குத்தகைக்கு விடப்பட்டு,9 ஆண்டுகள் முடிவடைந்த அசையா சொத்துக்களுக்கு அப்போதைய அங்காடி மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை மறுநிர்ணயம் செய்யப்படவேண்டும் எனவும்குத்தகை விடப்பட்ட இனங்களுக்கு அங்காடி , செய்யப்படுவதால் நகராட்சிக்கு பெரும் இழப்பு மதிப்பீட்டை விட குறைவாக வாடகை நிர்ணயம் ஏற்ப்படுதுவதை தவிர்க்கும் பொருட்டு சரியான முறையில் நிதியிழப்பு ஏற்படாதவாறு வாடகை மறு நிர்ணயம் செய்வது குறித்து ஆராய அந்தந்த மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களை கொண்டு கண்காணிப்புக்குழு ஏற்படுத்த வேண்டும் என நகராட்சி நிர்வாக ஆணையர்சென்னை அவர்களின், ந.எண்.க.15316/2016/ஆர்3,நாள்:30.11.2016 சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டதுசென்னை அவர்களின் ,அதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாக ஆணையர் . வழிகாட்டுதலின்பட9 ஆண்டுகள் முடிவடைந்த இனங்களுக்கு வாடகை மறுநிர்ணயம் செய்து இந்நகராட்சியின் நகரமன்ற தீர்மான எண்.183:நாள்,28.02.2017- ன்படி கடைகுத்தகைதாரர்களுக்கு அறிவிப்பு கடிதம் வழங்கி 01.04.2017 முதல் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டதுவாடகை . மறுநிர்ணயம் நிர்ணயம் செய்யப்பட்டதை எதிர்த்து குத்தகைதாரர்களால் சென்னை று நீதிப்பேராணை வழக்குகள் தாக்கல் உயர்நீதிமன்றத்தில் பல்வே .செய்யப்பட்டதுஅவ்நீதிப்பேராணை வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டுஅதன்மீது , அம்மேல்முறையீட்டில் .குத்தகைதாரர்களால் மேல் முறையீடு தாக்கல் செய்யப்பட்டது ஆரணி நகராட்சி அவர்கள் புதியதாக ,குத்தகைதாரர்களின் வாடகை குறித்து ஆணையாளர் ச,காணிப்புக்குழு அமைத்து நகராட்சி நிர்வாக ஆணையர்கண்ெென்னை அவர்களின் ந.எண்.க.15316/2016/ஆர்3,நாள்:30.11.2016 சுற்றறிக்கையின் வழிகாட்டுதலின்படி கடை வாடகையினை மறுசீராய்வு செய்து வாடகை நிர்ணயம் செய்யுமாறு சென்னை உயர்நீதிமன்றத்தில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதுஅடிப்படையில் ஆணையாளர் ஆரணி நகராட்சி அவர்கள் அதன் . புதியதாக கண்காணிப்புக்குழு அமைக்கப்பட்டு கடை வாடகை மறுசீராய்வு செய்து வாடகை நிர்ணயம் செய்யப்பட்டதினை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வேலூர் அவர்களுக்கு பணிவுடன் சமர்ப்பித்து ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்படி கடைகளுக்கு 01.04.2017 முதல் எழுப்பப்பட்ட கேட்பினை மாற்றி தற்போது மறுநிர்ணயம் செய்யப்பட்டு ஒப்புதல் பெறப்பட்ட வாடகை தொகையை 01.04.2017 முதல் மறுநிர்ணய கேட்பாக நிர்ணயம் செய்து கணினியில் பதிவேற்றம் செய்து வழக்கின் இடைகால தீர்ப்பின்படி மேற்படி கடைகுத்தகைதாரர்களால் ஆணையாளர் , ஆரணி நகராட்சி அவர்களின்14.06.2017 தேதிய உத்தரவுவின்படி Security Deposit Lease,Code: 3402001 செலுத்தப்பட்ட தொகையினை சம்மந்தப்பட்ட கடைகுத்தகைதாரர்களின் வரிவிதிப்பு கணக்கில் நேர் செய்து மேற்படி கடைகுத்தகைதாரர்களுக்கு மறுநிர்ணயம் செய்யப்பட்ட வாடகை மற்றும் கேட்பு அறிவிப்பு கடிதம் வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது .

அலுவலக குறிப்பு .மன்றம் அனுமதிக்கலாம்-:(ந.எண்.க.2408/அ3/2018)

10. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் TATA ACE ஆட்டோ 3 எண்ணிக்கை வாகனங்களுக்கு 25.03.2020ந் தேதியுடன் இன்சூரன்ஸ் முடிவடைகிறது. மேலும் ஒராண்டிற்கு புதுப்பித்துக்கொள்ள யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு தொகை செலுத்த தோராய செலவினம் ரூ.69,000/- மட்டும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| | | | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | TN 251833 | - | 23000/- |
| 2 | TN 251839 | - | 23000/ |
| 3 | TN 251856 | - | 23000/ |
| | **ஆகமொத்தம்** | | **69000/-** |

அலுவலககுறிப்பு :- 1.மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண் : 264/2020/எச்1)

11. இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் லாரி மற்றும் TATA ACE ஆட்டோ ஆகியவற்றிற்கு 31.03.2020ந் தேதியுடன் இன்சூரன்ஸ் முடிவடைகிறது. மேலும் ஒரு ஆண்டிற்கு புதுப்பித்துக்க ஆரணி போக்குவரத்து அலுவலகத்தில் தொகை செலுத்த வேண்டிய செலுத்த தோராய செலவினம் ரூ.31,000/-க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| | | | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | TN 25V9462 | - | 3600/- |
| 2 | TN 25V9463 | - | 3600/- |
| 3 | TN 25V9465 | - | 3600/- |
| 4 | TN 25V4633 | - | 4200/- |
| 5 | TN 25V4635 | - | 4200/- |
| 6 | TN 25AZ1101 | - | 5900/- |
| 7 | TN 25AX6476 | - | 5900/- |
| | **ஆகமொத்தம்** | | **31000/-** |

அலுவலககுறிப்பு :- 1.மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண் : 264/2020/எச்1)

12.இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டம் மூலம் 1 முதல் 18 வரை வார்டுகளில் தினசரி தனியார் மயம் மூலம் அதாவது BLOCK CAT SOLUTION நிறுவனத்தின் மூலம் 116 பேர் தூய்மை பணி செய்கின்றனர்.அவை 05.03.2020ந் தேதியோடு ஒப்பந்தம் முடிவடைகிறது. இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளர்(பொ) அவர்களின் குறிப்பின்படி அதாவது நகராட்சியில் ஆட்கள் பற்றாக்குறை காரணமாக 06.03.2020 முதல் 31.05.2020 வரை மேலும் மூன்று மாதங்களுக்கு நீட்டிப்பு செய்யவும் அதற்காக ஆகும் தோராய செலவினம் ரூ.44.52 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு: 1.மன்றம் அனுமதிக்காலம்.2.-06.03.2020 முதல் 31.05.2020 வரை பணி நீட்டிப்பு அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் : 264/2020/எச்1).

13. துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் செய்யாறு அவர்களின் கடிதம் ந.க.எண். 2833/இ4/2013 நாள். 10.02.2020ன்படி இந்நகராட்சி பகுதியில் நோய் தடுப்பு பணிகள் பாதிக்காத வகையில் ஏற்கனவே பணி செய்து வரும் டெங்கு நோய் தடுப்பு தற்காலிக பணியாளர்கள் 04.02.2020 முதல் 30.04.2020 வரை 87 நாட்களுக்கு 40 தற்காலிக பணியாளர்கள் நியமித்து டெங்கு நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ளவும் நாள் ஒன்றுக்கு ரூ. 280/- தினக்கூலி அடிப்படையில் ஆகும் தோராய செலவினம் ரூ. 9.75 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
**அலுவலக குறிப்பு**1.பொது சுகாதாரம் டெங்கு நோய் தடுப்பு பணிகள் செய்ய 40 DBC பணியாளர்கள் தற்காலிக பணியமர்த்தி கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.மேற்படி செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
**கோப்பு எண். 1537/2012/எச்1**

14.ஆரணி நகராட்சி பொறியியல் பிரிவில் தமிழக அரசு திட்டப் பணிகள், வளர்ச்சி பணிகள், சாதனைகள் மற்றும் பொறியியல் பிரிவு சம்மந்தமாக செய்தி தாள்களில் வரும் விளம்பரங்களுக்கு தொகை வழங்க ஆகும் தோராய செலவினம் ரூ.1.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு: 1.மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 2.மேற்படி செலவினம் வருவாய் நிதியின்கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(கோப்பு எண்.765/2019/இ1)

15. ஆரணி நகராட்சியில் உள்ள எரிமேடை மற்றும் கமண்டல நகாநதி ஆகிய இடங்களில் உள்ள குப்பைகளை JCB இயந்திரம் கொண்டு அகற்றிய SUJ எர்த் முவர்ஸ் நிறுவனத்திற்கு 32 மணி நேரம் வேலை செய்ததற்கு ரூ.27200/- செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கும்.

அலுவலக குறிப்பு :- 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 2. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் : 765 / 2019 / இ1)

தனி அலுவலர்
ஆரணி நகராட்சி